பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

சுடர் 5 பிரமோதூத வூ புரட்டாதி ௴ 01 உ திங்கட்கிழமை (17-09-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 27 கதிர் 197

# யாழ் நகர் மீது எரிகுண்டு வீச்சு!

# பல கட்டடங்கள் தீப்பிடித்தன!!

## விமானங்கள் நேற்று அனர்த்தம்

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 17

**நேற்றுமாலை யாழ் நகரப் பகுதி மீது விமானத்திலிருந்து எரிகுண்டுகள் வீசப்பட்டன. இதனால் நகரில் பல வீடுகள், கட்டடங்கள் தீப்பிடித்தன.**

நேற்றுமாலை அவ்ரோ மற்றும் சீனச்சகடை விமானங்களில் இருந்து வீசப்பட்ட குண்டுகள் நகரில் விழுந்த போதே அப்பகுதிகளில் தீப்பிடித்து பரவியது.

கட்டடங்கள் பல எரிந்ததால் நேற்றுமாலை நகரப் பகுதியில் புகை மண்டலம் காணப்பட்டது.

நேற்று மாலை 3 30மணி முதல் 5 மணிவரை அவ்ரோ விமானமும், சகடை விமானமும், பொம்மர்களும், ஹெலிகளும் மாறிமாறி நகரைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டன.

அவ்வேளையில் அவை உணவுப் பொதிகளை கோட்டைப் பகுதியில் போட்டன.

திடீரென சகடை விமானத்தில் இருந்து ஒரேயடியாக ஒன்பது, பத்து எனப் பல குண்டுகள் வீசப்பட்டன.

அடுத்து அவ்ரோவில் இருந்தும் இத்தகைய குண்டுகள் வீசப்பட்டன.

ஆனால் அந்தக் குண்டுகள் நிலத்தில் வந்து விழுந்த போது வெடித்த சத்தம் எழவில்லை.

அதற்குப் பதிலாக அவை விழுந்த இடங்களில் தீ பரவி புகை எழுந்ததை அவதானிக்க முடிந்தது.

கோட்டைக்கு அருகில் கொட்டடிப்பகுதி வீடமைப்புத் திட்டத்தில் உள்ள வீடுகள் எரிந்து நாசமாகின.

ஸ்ரான்லிவீதியில்வெலிங்டன் தியேட்டருக்கு அருகில்வீழ்ந்த குண்டினால் தியேட்டரின் ஒரு பகுதியும் அருகில் உள்ள சில கடைகளும் தீப்பிடித்ததாக அறியவந்தது.

நகரின் மற்றும் பல கட்டடங்களும் தீப்பிடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது (உ-3-6)

## யாழ். முஸ்லிம் பகுதி மீது தொடர்ந்தும் தாக்குதல்கள்

யாழ்ப்பாணம், செப். 17

யாழ் முஸ்லிம் வட்டாரப் பகுதி மீது நேற்றும் விமானக் குண்டு வீச்சு மற்றும் ஷெல், பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் அப்பகுதியில் இருந்து வெளியேறி இருந்த மக்கள் - அங்கு தமது உடைமைகளை எடுக்கச் சென்று, இடையில் திரும்ப நேரிட்டது.

நேற்றைய தாக்குதலின் போதும் வீடுகள், கட்டடங்கள் பல சேதமடைந்தன.

கடந்த சில நாட்களாக இந்தப் பகுதி மீதே அதிகளவிலான தாக்குதல்கள் நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நாவாந்துறை, கொட்டடி பகுதிகள் மீதும் நேற்றுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. (ஓ-3-6)

## தியாகி திலீபன் நினைவாக குடாநாட்டில் பந்தல்கள்

யாழ்ப்பாணம், செப். 17

குடாநாட்டில் தியாகி திலீபனின் மூன்றாவது ஆண்டு நிறைவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் நேற்று நடைபெற்றன.

முக்கிய இடங்களில், திலீபனின் உரைகளும், திலீபன் நினைவாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய பிரமுகர்கள் ஆற்றிய உரைகளும் ஒலிபரப்பப்பட்டன; திலீபனின் நினைவுப் பாடல்களும் ஒலிபரப்பாகின.

சந்திகளில் வாழை, தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் திலீபனின் உருவப் படங்கள் வைக்கப்பட்டு குத்துவிளக்குகளும் ஏற்றப்பட்டிருந்தன.

இவ்வாறு குடாநாட்டில் எல்லாப்பகுதிகளிலும் திலீபன் நினைவு நிகழ்ச்சிகள் இடம் பெற்று வருவதாக எமது செய்தியாளர்கள் அறிவிக்கிறார்கள். [ஓ-6]

## யாழ். கோட்டை பகுதியில் மேலும் ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், செப். 17

யாழ் கோட்டை மோதல்களின் போது அரசுப் படையினர் இழந்த மேலும் பல ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியிருக்கிறார்கள்.

ரி 56 ரக ரைபிள்கள் - 3, ரி 81 ரக ரைபிள்கள் - 2. 60எம் எம். மோட்டார் - 1 203 ஷெல் - 6, எல் எம் ஜி ரவைக் கூடு - 1, ஏகே ரவைக கூடு - 5 ரவைகள் - 113 ஆகியவை நேற்று முன்தினம் புலிகளினால் மீட்கப்பட்டன. (உ)

## வியாழனன்று வீசப்பட்ட புகைக்குண்டில் 'பொஸ்பரஸ்'

கடந்த வியாழன் மாலை "அவ்ரோ" விமானத்திலிருந்து வீசப்பட்ட புகைக் குண்டுகளில் 'பொஸ்பரஸ்' சேர்க்கை காணப்பட்டதாக யாழ் பல்கலைக்கழக ஆய்வு வட்டாரங்கள் தெரிவித்தன.

விமானத்திலிருந்து விடுபட்டு காற்றில் பட்டவுடன் இந்த பொஸ்பரஸ் சேர்க்கை புகைத்துக் கொண்டு எரிந்ததாகவும் —

தொடர்ந்து நீண்ட நேரம் நீடித்து எரிவதற்கு வசதியாக இந்தக் குண்டில் பஞ்சுகள் நிறைந்த தலையணையும், ஒருவகை எண்ணெயைக் (ஓயிலைக்) கொண்ட 'ரின்' னும் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-6)

## காத்தான்குடி: தமிழர் கொலை

கொழும்பு, செப் 17

காத்தான்குடியில் தமிழர் ஒருவர் முஸ்லிம் கோஷ்டி ஒன்றினால் கொல்லப்பட்டார்.

இப்படி பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாக இந்திய வானொலி அறிவித்தது. (ஒ-எ)

## மாத்தயா, யோகியை தேடி வலை விரிப்பாம்!

கொழும்பு, செப். 17

ஸ்ரீலங்கா அரசாங்க அதிகாரிகளும், இராணுவ அதிகாரிகளும் சிங்கள மக்களையும், வெளியுலகத்தையும் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றனர்.

வெகுஜன தொடர்பு சாதனங்களும் கொழும்பில் வெளியாகும் தகவல்களை நம்பி- "புளுகு" கள் என்று தெரியாமல் - அவற்றை வெளிப்படுத்துகின்றன.

அரசசார்பு நிறுவனமான "லேக்ஹவுஸின்" சிங்கள ஞாயிறு வெளியீடான "சிலுமின" வில் நேற்று வெளியான ஒரு நகைச்சுவை செய்தியை வாசித்துப்பாருங்கள்:-

"படையினர் யாழ். கோட்டையைப் பிடித்து பின்னர் - விடுதலைப்புலிகள் பிரமுகர்களான மாத்தயா, யோகி, டொமினிக் ஆகியோரைத் தேடி வலைவிரித்துள்ளனர்" - இது ஒரு செய்தி.

"யாழ். கோட்டை எமது கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டது, இன்னும் மூன்று நாட்களில் யாழ்ப்பாணம் எமது கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும்" - இது மற்றொரு செய்தி.

யாழ் கோட்டைக்குள் பிரவேசித்த இராணுவ அதிகாரி ஒருவரே இந்தத் தகவலைத் தெரிவித்ததாக அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. [ஒ-எ]

## குழந்தைகளின் வளர்ச்சி போஷாக்கின்றி பாதிப்பு

யாழ்ப்பாணம், செப். 17

யாழ் மாவட்டத்தில் உள்ள 20 ஆயிரத்துக்கும் அதிகமான குழந்தைகளின் வளர்ச்சி போஷாக்கின்மையால் பாதிக்கப்படும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக வைத்திய வட்டாரங்கள் எச்சரிக்கை விடுத்திருக்கின்றன. குழந்தைகளுக்குத் தேவையான உணவு, பால்மா வகைகள் இங்கு கிடைப்பதில்லை.

இதனால் குழந்தைகளின் போஷாக்கு பாதிப்புறும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

ஒருவயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்குத் தாய்ப்பால்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## உணவுக் கப்பல் இன்று புறப்படும்

யாழ்ப்பாணம், செப் 17

கொழும்பிலிருந்து உணவுப் பொருள்களுடன் கப்பல் ஒன்று பருத்தித்துறை நோக்கி இன்று இரவு புறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

'லங்காசிறி' என்னும் இந்தக் கப்பலில் சுமார் 2 ஆயிரத்து 600 மெற்றிக்தொன் உணவுப்பொருள்கள்கொண்டு வரப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-5)

## வவுனியா தமிழர் வீடுகள்; ராணுவம் தகர்க்க முயற்சி

வவுனியா, பாவற்குளம் முதலாம் யுனிற் பகுதி இராணுவத்தினர் முகாமிலிருந்து வெளியேறி, அருகில் இருந்த வீடுகளை குண்டு வைத்து தகர்க்க முயற்சி மேற்கொண்டனர்.

கடந்த சனிக்கிழமை தமிழர்களுக்குச் சொந்தமான இந்த வீடுகளைத் தகர்க்க எடுத்த முயற்சி விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் இராணுவத்தினரைத் தாக்கி அங்கிருந்து பின்வாங்கச் செய்தனர் என்று விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ)

## பஞ்சாபில் 25பேர் உயிரிழப்பு

புதுடில்லி, செப். 17

பஞ்சாப்பின் பல பகுதிகளிலும் நேற்று நடந்த தாக்குதல்கள் மற்றும் மோதல்களில் மொத்தம் 25 பேர் பலியாகினர்.

பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 10 பேரும், தீவிரவாதிகள் 9 பேரும், பொது மக்கள் 6 பேரும் இந்தச் சம்பவங்களில் உயிரிழந்தனர். (ஓ)

## தம்பலகமத்தில் சனியன்று விடுதலைப்புலிகள் தாக்குதல்

### சிப்பாய் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 17

தம்பலகமம், 97 ஆம் கட்டை 4 ஆம் வாய்க்கால் பகுதியில் அமைந்துள்ள இராணுவ காவல் அரண் மீது கடந்த சனிக்கிழமை விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். 303 ரக ரைபிள் ஒன்றும் தங்களால் மீட்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. [ஒ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### இடமாற்றம்

அரஸ் ஜவுளியகம் இல: 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம் மண்டேலா ரேடர் (புத்தக சாலை) இல. 2. பஸ்நிலையம் ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம் ஆகியன தற்போது இல. 256, பருத்தித்துறை வீதி, (நல்லூர் தேரடி முன்பாக) நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்குகின்றன என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். [13938]

### கோழித்தீன்

கோழித்தீன் வகைகள் கலந்தும், கோழித்தீன் மூலாதாரப் பொருட்கள் அரைத்தும் கொடுக்கப்படும். சிவா மில்ஸ் அன் இன்டஸ்றீஸ், 4ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [14187]

### RATHY WATCH WORKS

மேற்படி ஸ்தாபனம் 12, பொன்னையா லேன் (உப தபால் நிலைய அருகாமையில் பிடாரி கோவிலடி) ஆறுகால் மடம் ஆனைக்கோட்டை யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் இயங்குகிறது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம். இங்கு திருத்த வேலைகள் மணிக்கூடு பற்றறி, விற்பனைகள் நடைபெறுகின்றது என்பதையும் அறியத்தருகிறோம். [13937]

# முல்லைத்தீவில் 50 ஆயிரம் மக்கள் இடம் பெயர்ந்தனர்

## உணவு நெருக்கடியால் அகதிகளை பராமரிக்க முடியாதநிலை

மாங்குளம், செப். 17

முல்லைத்தீவில் இடம் பெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து வட்டுவாகல், முள்ளிவாய்க்கால், கள்ளப்பாடு, முல்லைத்தீவுநகரம், கரைச்சிக்குடியிருப்பு, சின்னத்தன்காடு ஆகிய பகுதிகளில் இருந்து சுமார் 50 ஆயிரம் மக்கள் குடிபெயர்ந்துள்ளனர். இவர்கள் முத்தையன்கட்டு, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு ஆகிய பகுதிகளுக்கு வந்து தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களுடன் முல்லைத்தீவில் 11 முகாம்களில் தங்கியிருந்த திருமலை அகதிகளும் இடம் பெயர்ந்துள்ளனர்.

இடம்பெயர்ந்த அகதிகளுக்கு உணவு வகைகளை வழங்க முல்லைத்தீவு அரசாங்க அதிபர் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

இப்பகுதியில் எரிபொருள் மின்சாரம் இல்லாததாலும் இராணுவ நடவடிக்கை நீடிப்பதாலும் அறுவடை செய்த நெல்லை அரிசியாக்க முடியாத நிலை இருந்து வருகிறது.

கப்பல் மூலம் வரும் உணவு திருப்தி அளிக்கவில்லை எனவும், இதனால் இப்பகுதிகளில் உணவு நெருக்கடி அதிகரித்திருப்பதாகவும், அகதிகளை உரிய முறையில் பராமரிக்க முடியாத நிலை உருவாகி இருப்பதாகவும் முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு வி. கந்தசாமி தெரிவித்தார். (இ 94)

## நியமனங்கள் ரத்தாகும்

நவாலி, செப். 17

மாகாணசபைகளில் அரசாங்கசேவையில் இல்லாதவர்களைக் கொண்டு வழங்கப்பட்ட தற்காலிக, அமைய நியமனங்கள் உடனடியாக ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பான 1990 ஜூன் 6ஆம் திகதி இடப்பட்ட இல: 2/90 சுற்று நிருபம் அரசாங்க நிருவாக மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் திணைக்களங்களின் தலைவர்களுக்கும் மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-100)

## வயலில் சூடடித்த இடத்தில் ஹெலி - பொம்மர் தாக்குதல்

### வவுனிக்குளத்தில் சம்பவம்

மாங்குளம், செப். 17

வவுனிக்குளத்தில் சூடடித்துக் கொண்டிருந்தவர்களை நோக்கி ஹெலியும், பொம்மரும் தாக்குதல் நடத்தின. இதனால் சில நெற்சூடுகள் சேதமடைந்தன.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது

அப்பகுதி கிராமசேவையாளர் திரு பாக்கியநாதன் இரவு ஏழு மணி அளவில் தனது வயலில் ஊழியர்களுடன் சூடடித்துக் கொண்டிருந்தபோது திடீரென வந்த ஹெலியும், பொம்மரும் சூடடித்த இடத்தில் வெளிச்சத்தைக் கண்டு விட்டுத் தாக்குதல் நடத்தின. அப்போது இருட்டாக இருந்ததினால் கிராமசேவையாளரும் மற்றவர்களும் உயிர்தப்பினர்.

இத்தாக்குதலை முடித்து வான் படைகள் திரும்பிச் செல்கையில் அருகில் காணப்பட்ட நெற்சூடுகள் மீதும் வேட்டுக்களைத் தீர்த்தன. இதனால் சில நெற்சூடுகள் சேதமடைந்தன. (இ-94)

## வவுனியாவில் படை முகாம்கள் பலப்படுத்தப்படுகின்றன

யாழ்ப்பாணம், செப். 17

வவுனியா நகரப் பகுதியில் உள்ள முப்படைகளும் தமது முகாம்களை பலப்படுத்தும் வேலையில் ஈடுபட்டுள்ளன.

முகாம்களைச் சுற்றி மண்மூடைகள் அடுக்கியும், புதிய சென்றிகளை அமைத்தும் பாதுகாப்பு பலப்படுத்தப்படுகிறது.

அதேவேளை- நகரில் கண்டபடி மக்கள் நடமாட படையினர் நடைவிதித்துள்ளார்கள் நகரில் அவர்களால் வழங்கப்படும் ''பாஸ்'' இன்றித் திரிபவர்கள் முகாமுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். [இ-3-6]

## ஊரடங்கு நாட்களிலும் கிளிநொச்சி வழமை நிலை

கிளிநொச்சியில் ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்பட்டிருந்த சமயம் மக்கள் தமது வழமையான வேலைகளை மேற்கொண்டனர்.

வழமைபோல் சந்தைகள் கூடின. கடைகள் திறக்கப்பட்டன, அரச அலுவலகங்கள் நடைபெற்றன.

அந்தப் பகுதியில் இராணுவ நடவடிக்கையோ, வான் தாக்குதல்களோ இடம் பெறவில்லை.

சடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டபோது கிளிநொச்சி, முல்லைத்தீவிலும் பிறப்பிக்கப்பட்டதும் நேற்று முன்தினம் சனிக்கிழமை கிளிநொச்சியில் ஊரடங்கு நீக்கப்பட்டதும் தெரிந்தவையே.

### காட்டுவது ஒன்று கட்டுவது வேறு

காட்டுவது ஒன்று, சட்டிக்கொடுப்பது வேறொன்று சாவகச்சேரியில் வியாபாரிகள் சிலர் சர்க்கரை தேயிலைத்தூள் விற்பனையில் இப்படியான மோசடியில் ஈடுபடுகின்றனர் என்று கூறப்படுகிறது.

## புங்குடுதீவில் குடி தண்ணீர் கலன் 1.50

யாழ்ப்பாணம், செப் 17

புங்குடுதீவுப் பகுதியில் குடி தண்ணீர் கலன் 1 ரூபா 50 சதத்துக்கு விற்கப்படுகிறது. அதுவும், ஒரு குடும்பத்துக்கு நான்கு கலன் மட்டும் என்று விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

சர்வோதயம் தனது கிளைகளில் வைத்து காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை குடி தண்ணீரை விநியோகம் செய்து வருகிறது. (இ-15)

## திட்டமிட்டபடி பாக். தேர்தல்

திட்டமிட்டபடி எதிர்வரும் அக்டோபர் மாதம் 24ஆம் திகதி பாகிஸ்தானின் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி குலாம் இஷாக்கான் அறிவித்தார்.

முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ மீதான ஊழல் வழக்கு விசாரணையைக் காரணம் காட்டி பொதுத் தேர்தலை ஒத்திவைக்கும் எண்ணம் தனக்குக் கிடையாது என்றும் ஜனாப் குலாம் இஷாக்கான் தெரிவித்தார். (இ-எ)

## வவுனியாவரை ரயில்

வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியில் உள்ள ரயில் பாதை திருத்தப்படுவதாகவும்-

இதன் பின்னர் மதவாச்சி வரை தற்சமயம் நடைபெறும் வடபகுதி ரயில் சேவை, வவுனியா வரை விஸ்தரிக்கப்படும் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

## மும்மொழி தபால் அட்டை

மும் மொழிகளிலும் அச்சிடப்பட்ட தபால் அட்டைகள் அரசு திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களுக்கு வழக்கப்பட்டுள்ளன

பொதுமக்களுடன் தொடர்பு கொள்ளும் போது இந்த 'மும்மொழி' தபால் அட்டைகளையே பாவிக்க வேண்டும் என்று சகல திணைக்களத் தலைவர்களும் பொது நிர்வாக அமைச்சினால் பணிக்கப்பட்டுள்ளனர். (இ-எ)

## அறிஞர் அண்ணா பிறந்ததினம்

சென்னை, செப், 17

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரான பேரறிஞர் அண்ணாத்துரையின் 82 ஆவது பிறந்ததினம் [illegible] கொண்டாடப்பட்டது. (இ எ)

### பத்திரிகை விநியோகஸ்தர்களுக்கு ஓர் அறிவித்தல்

யாழ். மாநகரசபை எல்லைக்குள் பத்திரிகை விற்பனை செய்ய விரும்புவோர் நேரடியாக உதயன் பணிமனையுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

முகாமையாளர்,
உதயன்.

### அறிவித்தல்

உதயன் பத்திரிகையில் மரண அறிவித்தலைப் பிரசுரிக்கக் கொண்டு வருபவர்கள் தமது அடையாள அட்டையை அல்லது தமது பகுதி உதவி அரச அதிபர், கிராம சேவையாளர், உதயன் பத்திரிகை முகவர், உதயன் செய்தியாளர் ஆகியோரில் ஒருவரிடமிருந்தோ அல்லது தமது பகுதி முக்கிய பிரமுகர் ஒருவரிடமிருந்தோ அத்தாட்சிக் கடிதத்தைக் கொண்டு வரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

முகாமையாளர்,
உதயன்.

## 41ஆம் நாள் நினைவஞ்சலி

### திரு. சந்திரசேகரம்பிள்ளை சாமுவேல் சதாசிவம்

(நடேசவாத்தியார், இளைப்பாறிய ஆசிரியர்)

தோற்றம்: 17 - 11 - 1907 | மறைவு: 08 - 08 - 1990

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக 17-09-1990 நண்பகல் 12.00 மணிக்கு அவரது கழுக்காவத்தை அல்வாய் மேற்கில் உள்ள இல்லத்தில் ஜெபக் கூட்டம் நடைபெறும். இவ் ஜெபக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்: குட்டி.

''கழுக்காவத்தை''
அல்வாய் மேற்கு,
அல்வாய். [சி 5203]

## மரண அறிவித்தல்

### தம்பிமுத்து லட்சுமிப்பிள்ளை

தையிட்டியை பிறப்பிடமாகக் கொண்டவரும் நாச்சிமார் கோவிலடியில் வசிப்பவருமாகிய தம்பிமுத்து லட்சுமிப்பிள்ளை 16-09-90இல் காலமானார்.

அன்னார் தம்பிமுத்துவின் (பிரபலவர்த்தகர் தட்டாதெரு) அன்பு மனைவியும் செல்வராணி, பரமேஸ்வரி, நவரத்தினராசா, மகேஸ்வரி, சிவசுப்பிரமணியம் (ஓமான்), யோகராசா, தனலட்சுமி, காலஞ்சென்ற தங்கேஸ்வரியின் அன்புத் தாயாரும், பஞ்சாட்சரம், காலஞ்சென்ற செல்வரட்ணம், புஸ்பமலர், சின்னத்துரை, யோகராணி, உமாராணி, கணேந்திரராசா, காலஞ்சென்ற யோகநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஸ்ரீகுமார், வசந்தி, ரகு, ராகவன், ரமேஸ், ரமணன், ராஜி, ரமாதுஷயந்தி, விஜிதா, பிரதீபன், பிரசாத், டஜனி, சாமினி, விஜயன், கீதானந்தன், மைதினி, பிரியதர்ஷன், கயமுகன், நிசாந்தி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், சதுர்ஷணனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் (17-09-90) திங்கட்கிழமை காலை 10மணிக்கு நடைபெற்று, 958/44, கே.கே.எஸ் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்வதற்காக எடுத்துச்செல்லப்படும் இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

ஆர் தம்பிமுத்து [கணவன்]

958/44. கே கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம். [14210]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



★

கூடியிருந்தோர் கண்ணீர் மல்கி நிற்க உண்ணாவிரத மேடையில் தியாகி திலீபன் உரையாற்றும் காட்சி.

★

# மாபெரும் மக்கள் புரட்சி வெடிக்கட்டும்!

## திலீபனின் இறுதி அறைகூவல்

எம் உயிரிலும் மேலான தமிழீழ மக்களே!

எனக்கு முன் பேசிய ஒரு சில பேச்சாளரின் பேச்சால் தான் நான் பேச வேண்டும் என நினைக்கின்றேன்.

இது எமது இலட்சியப் போராட்டம் இதை யாரும் கைவிடுமாறு என்னைக் கேட்காதீர்கள்!

எனது முடிவு எனக்குத் தெரியும்.

ஏற்கனவே நான் உயிர் வாழ்வது அதிசயமாய் இருக்கின்றது. ஏனெனில் நான் முதல் நாள் உண்ணாவிரதம் இருந்ததை விட அதற்கு அடுத்த அடுத்த நாள் மேலும் உற்சாகமாய் இருந்தேன். இன்று அதைவிட உற்சாகமாய் இருக்கிறேன். காரணம் நீங்கள் தரும் ஆதரவும் நீங்கள் இந்தப் புரட்சிக்குத் தயாராகி விட்டதும் தான் அந்த ஒன்றே போதும் நான் சாகலாம்.

650 பேருடன் 651 வனாக நான் போகிறேன் என்னைப் பற்றி யாரும் வீணாக கவலைப்படாதீர்கள், அலட்டிக் கொள்ளாதீர்கள். ஆனால் நீங்கள் புரட்சிக்குத் தயாராகுங்கள்!

எனது அவயங்கள் செயல் இழப்பதை நான் உணர்கிறேன். இனியொரு மனிதனாக என்னால் வாழமுடியாது என்பதும் எனக்குத் தெரியும்.

இது ஒரு இலட்சியப் போராட்டம் எமது வீரர்கள் ஒவ்வொருவரும் கொள்கைக்காக உயிரைக் கொடுக்க கூடியவர்கள் அவர்களும் என்னைத் தொடர்ந்து வருவார்கள் அவர்களையும் தடுக்காதீர்கள் நாங்கள் நான்கு ஐந்து பேர் சாவதால் எதுவித தீங்கும் ஏற்படாது மக்கள் புரட்சி வெடிக்க வேண்டும்.

> அணு அணுவாகப் பிரிந்து கொண்டிருக்கும் திலீபனின் உயிரைப் பார்க்கப் பொறுக்காத — நான்கு நாட்கள் பாரதத்தை நம்பி, நம்பிக்கை இழந்த மக்கள் — ஆற்றமுடியாத இந்தச் சாவில் இருந்து விடுபடுமாறு கதறி அழுது மேடையில் பேசினார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் இலட்சியப் பற்று நிறைந்த திலீபன் மக்கள் முன் — உண்ணாவிரத காலத்தில் தனது நான்காவது உரையை — ஆற்றினார். இதுவே அவரது இறுதிப் பேச்சாகவும் அமைந்துவிட்டது. அந்தப் பேச்சின் தொகுப்பு இங்கு பிரசுரமாகிறது.

நான் மூன்று தடவைகள் பேசியிருக்கிறேன் மூன்று தடவையும் திரும்பத் திரும்ப ஒரே கருத்தைத்தான் கூறுகிறேன் அதற்காகத்தான் சாகிறேன். எனது சாவைப் புரிந்துகொள்ளுங்கள். மக்கள் புரட்சி வெடிக்கட்டும் என்ற ஒரே கருத்தைத்தான் கூறுகிறேன்.

எனவே தயவுசெய்து இலட்சியத்தைக் கைவிடுமாறு கேட்கவேண்டாம். நீங்கள் அவ்வாறு கேட்பது இலட்சியத்தை அவமதிப்பது போல் இருக்கும்.

நாங்கள் சாதாரணமாக ஆளவேண்டும் என்ற ஆசையாலோ, வாழவேண்டும் என்ற ஆசையாலோ இயக்கத்துக்கு வரவில்லை. எம் தலைவரும் எம்மை அவ்வாறு வளர்க்கவில்லை. எமது இயக்கமும் அவ்வாறில்லை

எனக்கு உண்மையில் பெரும் ஆச்சரியமாய்த்தான் இருக்கிறது. ஏறக்குறைய 72 மணித்தியாலங்கள் கடந்து விட்டன. உண்மையில் நான் நேற்றையை விட அதிக உற்சாகமாக இருக்கிறேன். எனது உடல் நிலையைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒருவேளை அனைவரதும் பிரார்த்தனையோ எனக்குத் தெரியாது.

ஆனால் மீண்டும் மீண்டும் கேட்பது ஒன்றைத்தான். எமது போராட்டம் தொடரப்போகிறது. மக்கள் புரட்சி வெடிக்கப்போகிறது. அந்தப் போராட்டத்திற்கு நீங்கள் தயாராகுங்கள்!

நீங்கள் போராடுங்கள்! நான் மேலே இருந்து நீங்கள் தமிழீழம் அமைப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பேன்.

நாம் என்றும் உங்களை விட்டுப் போகமாட்டோம் எங்கள் உடல் மட்டும் தான் போகும் உயிர் என்றும் உங்களோடு ஒட்டியிருக்கும் அதை மறந்து விடாதீர்கள் எம்மைத் தொடர்ந்து எமது தோழர்கள் வருவார்கள் சகோதரிகள் வருவார்கள் அவர்களையும் நீங்கள் தடுக்காதீர்கள் அவர்களுக்கும் வழி விடுங்கள். நான் ஏற்கனவே பல தோழர்களிடம் கூறிவிட்டேன் நான் உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். ஏனைய தோழர்களும் அங்கு உங்களை எதிர்பார்த்துக்கொண்டிருப்பர்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர்களுக்கு அவர் இலட்சியம் தான் முக்கியம். உயிர் முக்கியமல்ல, அவர்களது வாழ்வு முக்கியமல்ல. அவர்களது இலட்சியம் தான் முக்கியம். அதை நிலைநாட்டவே நான் தலைவரால் முதல் முதலாக நியமிக்கப்பட்டேன். தலைவருடன் சண்டையிட்டுத்தான் இவ் அனுமதியைப் பெற்றேன்.

எனவே எனக்கு எனது முடிவு தெரியும் எனவே தயவு செய்து என்னைத் தடுக்காதீர்கள்.

நான் என்னுயிரிலும் மேலாக நேசிக்கும் மக்களே! உங்களிடம் ஒரு பொறுப்பை விட்டுச் செல்கின்றேன் நீங்கள் அனைவரும் பரிபூரணமாகக் கிளர்ந்தெழவேண்டும். இங்கு ஒரு மாபெரும் மக்கள் புரட்சி வெடிக்கட்டும்.

## இடம் மாற்றம்

பூநகரி, செப். 17

பரந்தனில் இயங்கி வந்த கூட்டுறவு ஆணையாளர் அலுவலகம் தற்காலிகமாக பூநகரிக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது பரந்தனில் உள்ள இதன் கட்டடம் இராணுவத்தால் சேதமாக்கப்பட்டுள்ளது. (இ)

## வீடுகள் சேதம்

கொழும்புத்துறை, செப். 17

வியாழன் இரவு நடந்த விமானத்தாக்குதலில் கொழும்புத்துறை, சணக்கர் சந்தி, புங்கம்குளம் வீதியைச் சேர்ந்த பத்து வீடுகள் சேதமடைந்தன. கொழும்புத்துறை உப மின் நிலையமும் சேதமடைந்தது. (இ-30)

## அகதிகளுக்கு உதவி இல்லை

மாங்குளம், செப். 17

வவுனிக்குளத்தில் உள்ள மாங்குளம், செட்டிக்குளம், திருகோணமலை, பரந்தன், கிளிநொச்சி, சட்டுவன் பகுதி அகதிகளுக்கு இன்னும் போதிய உதவிகள் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப் படுகிறது (இ-94)

## ஒத்திவைப்பு

வட்டுக்கோட்டை, செப் 17

பொன்னாலை அருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மாகோற்சவம் நாட்டில் நிலவும் அமைதியின்மை காரணமாகப் பின்போடப்பட்டுள்ளது. (இ-161)

## துர்நாற்றம்

யாழ்ப்பாணம், செப். 17

யாழ் போதனா வைத்திய சாலைப் பகுதியில் இறந்த நாய்களை அப்புறப் படுத்த ஆட்கள் இல்லை. அதனால் துர்நாற்றம் வீசுகிறது. (இ-3)

## பூநகரியில் ஹெலி வேட்டு

பூநகரி, செப். 17

பூநகரிப் பகுதியில் சன நெருக்கம் அதிகமாக காணப்படும் காலை வேளையில் ஹெலி தாழப்பறந்து துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்க்கிறது. பூநகரியில் பொருள்களை ஏற்றி நின்ற ஒரு லொறிமீது துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டபோது லொறியில் இருந்த தேங்காய் எண்ணெய்ப் பீப்பாய் உடைந்து பெருமளவு எண்ணெய் வெளியே கொட்டப் பட்டுவிட்டது. [இ]

# அகதிகள் பாதுகாப்பு மன்றம் செஞ்சிலுவை குழுவிடம் மகஜர்

யாழ்ப்பாணம், செப் 17

''கடந்த மூன்று மாதங்களாகத் தொடரும் இராணுவ நடவடிக்கைகளால் நிர்க்கதி நிலையில் உள்ள தமிழ் மக்களின் அவல நிலையை வெளிநாடுகளுக்கு எடுத்துக் காட்டவே உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்தி வருகிறோம்''

தமிழ் மாநில அகதிகள் பாதுகாப்பு மன்றம் செஞ்சிலுவைச்சங்க சர்வதேச குழுவிடம் சமர்ப்பித்த மகஜரில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

சனிக்கிழமை காலை முதல் மேற்படி குழுவின் முன்பாக இந்தச் சங்கத்தின் பிரதிநிதிகள் அடையாள உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

உண்ணாவிரத முடிவில் தமிழ் மக்களின் இன்னல்களை வெளிநாடுகளுக்கு எடுத்து விளக்குமாறு கோரும் மகஜரை அவர்கள் சமர்பித்தனர். (இ-30)

# இலவச நிவாரணம் வழங்க ஓய்வூதியர் கோரிக்கை

கோப்பாய், செப். 17

தற்சமயம் 1500 ரூபாவுக்கு கீழ் மாத வருமானம் பெறும் ஓய்வூதியக்காரர்களுக்கும் பங்கீட்டு அடிப்படையில் இலவச நிவாரணம் வழங்கவேண்டும்.

மேற்கண்ட கோரிக்கையை கோப்பாய் உதவி அரசாங்க அதிபரிடம் அந்தப்பகுதியைச் சேர்ந்த ஓய்வூதியர்கள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அரச அதிபருடன் தொடர்பு கொண்டு விவரம் தெரிவிப்பதாக அவர் தெரிவித்தார். [இ-72]

## இந்து இளைஞர் மன்றம் உதவி

மட்டுவில்மத்திசந்திரபுர ஸ்கந்தவரோதிய மகாவித்தியாலய முகாமிலுள்ள அகதிகளுக்கு இந்து இளைஞர் மன்ற ஒன்றியம் நவராத்திரி கால பத்து நாட்களிலும் உணவு வழங்கி உதவுவதென முடிவு செய்துள்ளது. (இ-31)

## மினிபஸ் சங்க அலுவலகம் சேதம்

யாழ்ப்பாணம், செப். 17

தாவடியில் இடம் பெற்ற ஹெலிக்கொப்டர் தாக்குதலில் இலங்கை அண்ணா தி மு க. தலைவரும் வட பிராந்திய மினிபஸ் சேவை சங்கத் தலைவருமான திரு. பொன். மதிமுகராஜாவின் இல்லமும் வடபிராந்திய மினிபஸ் சேவைச் சங்கத் தலைமையகமும் சேதம் அடைந்தன.

கடந்த 10 ஆம் திகதி தான் இந்த அலுவலகம் பாதுகாப்பின் நிமித்தம் தாவடிக்கு இடம் மாற்றப்பட்டிருந்தது. [இ]

# சிகிச்சை வசதி இன்றி கர்ப்பிணிப் பெண்கள்

யாழ்ப்பாணம், செப். 17

யாழ்ப்பாணப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து நாவற்குழியில் அகதிகளாக இருக்கும் கர்ப்பிணிப் பெண்கள் பலர் கிளினிக் வசதி இன்றி அவதிப் படுகின்றனர்.

நாவற்குழிப் பகுதியில் இயங்கி வந்த கர்ப்பிணிகளுக்கான கிளினிக் நீண்டகாலமாக இயங்காதிருப்பதைத் தொடர்ந்து இப்பகுதி மக்கள் நெடுங்குளப் பகுதியில் தற்போது இயங்கிக்கொண்டிருக்கும் கிளினிக்கில் சிகிச்சை பெற்று வந்தனர்.

தற்போது அந்நிலையத்துக்குவரும் கர்ப்பிணிப் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்ததை அடுத்து அங்கு செல்லும் பலர் திருப்பி அனுப்பப்படுகிறார்களாம்.

நாவற்குழிப்பகுதியிலிருந்து சென்ற சுமார் 15 கர்ப்பினிப் பெண்கள் கடந்த 11 ஆம் திகதி இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-15)

## இடம் பெயர்வு

பூநகரி, செப். 17

கௌதாரிமுனையில் இடம் பெற்ற கடற்படை பீரங்கித் தாக்குதல்களை அடுத்து பூநகரி மண்ணித் தலையில் இருந்த அகதிகள் பலர் பள்ளிக்குடாவுக்கு இடம் பெயர்ந்தனர். (இ)

# யாழ். போதனா வைத்தியசாலை கருவிகள் சேதமடையும் நிலையில்

யாழ்ப்பாணம், செப். 17

யாழ். போதனா வைத்திய சாலையில் அவசர சிகிச்சைப் பிரிவு, சளி அகற்றும் பிரிவு, எக்ஸ் றே பிரிவு, ஆய்வு [illegible] பெறுமதி வாய்ந்த கருவிகள் பராமரிப்பு இல்லாமல் சேதம் அடையும் நிலையில் இருந்து வருகின்றன.

அதே வேளை வைத்திய சாலையின் ஜெனரேட்டரும் அகற்றப்படாது அங்கேயே விடப்பட்டுள்ளது.

கட்டட வேலைகளுக்கு பயன்படுத்த நிறுத்தப்பட்டுள்ள கொம்பிறைசர், கிறயின் போன்றவையும் அங்கு பராமரிப்பற்ற நிலையில் விடப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவுக்கு வந்த பொருள்கள் தீவுப்பகுதிக்கு

யாழ்ப்பாணம், செப். 17
முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வந்த உணவுப் பொருள்கள் அங்கு இறக்கமுடியாததால் தீவுப்பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளன

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 'சிகிரியா' கப்பல் மூலம் அனுப்பப்பட்ட 260 தொன் உணவுப் பொருள்கள் அங்கு இறக்க முடியாத நிலையில் பருத்தித்துறைக்கு கொண்டுவரப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு இந்தக்கப்பலை அனுப்ப முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதும், பலன் அளிக்கவில்லை.

அதைத் தொடர்ந்து தீவுப்பகுதி குறிப்பாக நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகியவற்றுக்கு இந்த உணவுப் பொருள்களை விநியோகிக்க முடிவு செய்யப்பட்டது. அதற்கு வசதியாக கப்பல் அங்கு அனுப்பப்பட்டுள்ளது.

தற்சமயம் நெடுந்தீவில் நங்கூரமிட்டுள்ள இந்தக் கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள், ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டபின் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது' (உ.-3 5)

## போராளி மரணம்

யாழ்ப்பாணம், செப் 17
விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த லெப்டினட் நஜீப் (தாஸிம் சுழானி - பட்டாணிச்சேர், புளியங்குளம்) நேற்றுமுன்தினம் நெஞ்சுவலி காரணமாக மரணமானார்) எனத் தொரிவிக்கப்படுகிறது

## யாழ். அரசாங்க அதிபர் அடுத்த வாரம் திரும்புவார்

யாழ்ப்பாணம், செப் 17
யாழ்ப்பாணத்தில் நிலவும் உணவு, மருந்து மற்றும் அத்தியாவசிய பொருள்களுக்கான பற்றாக்குறை குறித்தும், பணப் புழக்கப் பாதிப்புக் குறித்தும் கொழும்பில் உயர் அதிகாரிகளோடு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கும் யாழ் அரச அதிபர் திரு அன்ரன் அல்பிரட் இவ் வாரம் யாழ்ப்பாணம் திரும்புவார்.

யாழ்.செயலக உதவி அரசாங்க அதிபர் திரு எஸ் ஈ நித்தியராஜ் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக யாழ். அரச அதிபரினால் கடந்த 12 ஆம் திகதி செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் ஊடாக அனுப்பி வைக்கப்பட்ட செய்தி நேற்றே திரு. நித்தியராஜுக்குக்கிடைத்ததாகத் தெரியவந்தது. (உ)

## நகரைக் கடக்கும் ஷெல்கள்!

யாழ்ப்பாணம், செப். 17
கோட்டைப் பக்கத்திலிருந்து நேற்று முன்தினம்இரவு இராணுவத்தினரால் ஏவப்பட்ட இரண்டு ஷெல்கள் நகரைக் கடந்து நல்லூர், திருநெல்வேலிப் பகுதிகளில் விழுந்துள்ளன.

நல்லூர் யமுனா வீதியிலும் திருநெல்வேலி இராமலிங்கம் வீதியிலும் வீடுகளுக்கு அருகில் இந்த ஷெல்கள் வீழ்ந்தன.

அவை வெடிக்காததால் பெரும் சேதங்கள் தவிர்க்கப்பட்டன. (உ-5)

## இந்திய மீனவர் மீது தாக்கு; ஜெயலலிதா கண்டனம்

சென்னை, செப். 17
இரணைதீவுக்கு அருகில் இலங்கை கடற்படையினரின் ஹெலிக்கொப்டர்கள் சுட்டு மூன்று இந்திய மீனவர்கள் மரணமான சம்பவத்தை அ. தி மு. க பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா கண்டித்தார்.

இது தொடர்பாக அவர் நேற்று விடுத்த அறிக்கையில், இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவது நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக கூறியிருக்கின்றார். (உ-எ)

### வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு

## அரசியல் தீர்வுதான் வழி! கட்சிகள் மாநாட்டில் முடிவு

கொழும்பு, செப். 17
வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் காணப்படவேண்டும்; இராணுவத் தீர்வுக்கு இடமில்லை என்று அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதி பிரேமதாஸா தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த மாநாட்டில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது. (உ-எ)

## கிளிநொச்சி கல்வி அலுவலக களஞ்சியத்தில் திருட்டு

பச்சிலைப்பள்ளி, செப் 17
கிளிநொச்சி கல்வி அலுவலகம், அதன் களஞ்சியம் ஆகியன உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதியான பொருள்கள் மற்றும் உபகரணங்கள் திருடப்பட்டுள்ளன.

தட்டச்சு இயந்திரங்கள், குளிர்சாதனப்பெட்டி, றோணியோ இயந்திரம், கல்குலேட்டர்கள் மற்றும் காகிதாதிகள் போன்றவையே திருடப்பட்டவை ஆகும்.

ஆசிரியர்கள், கல்வி அலுவலக ஊழியர்கள் ஆகியோரின் தனிப்பர் கோவைகள் மற்றும் ஆவணங்கள் பாதுகாப்பாக உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். [ஓ-117]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 229/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 17-09-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

## பிரதமர் சிங் சென்னையில்

சென்னை, செப் 17
தி.மு.கவின் ஐம்பெரும் விழாவில் கலந்துகொள்வதற்காக இந்தியப் பிரதமர் வி பி சிங் விசேட விமானத்தில் நேற்று மாலை சென்னைக்கு விஜயம் செய்தார்.

நேற்று மாலை கடற்கரையில் முதலமைச்சர்கருணாநிதியின் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் பிரதமர் சிங் பேசினார். (ஓ-எ)

## ஈராக்கிலும் பங்கீட்டு முறையில் மா!

ஈராக்கில பாண், மா ஆகியவற்றுக்கு பங்கீட்டு முறை கொண்டுவரப்பட்டுள்ளது.

ஒருவர் தினம் ஒன்றுக்கு மூன்று றாத்தல் பாண் அல்லது மாதம் ஒருதடவை 6 கிலோ மா வாங்க இப்பங்கீட்டு முறையின் கீழ் அனுமதிக்கப்படுவர். [ஓ-எ]

## காங்கேசனில் சிப்பாய் பலி

கொழும்பு, செப் 17
காங்கேசன்துறையில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் அரசுப்படையைச் சேர்ந்த ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார். இன்னொரு சிப்பாய் காயமடைந்தார்.

இராணுவ வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்ததாக இந்திய வானொலி அறிவித்தது.

பிளாஸ்டிக் படகு ஒன்றும் விடுதலைப் புலிகளினால் சேதமாக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

## ஈராக் மந்திரி குவைத்தின் ஆளுநர்

பக்தாத், செப். 17
குவைத்தின் ஆளுநராக ஈராக் அரசாங்கம் தனது உள்ளூராட்சி அமைச்சரை நேற்று நியமித்தது.

கடந்த ஆகஸ்ட் மாதம் குவைத் நாட்டை ஈராக் கைப்பற்றியதும் அதனை பின்னர் ஈராக்கின் ஒரு மாகாணமாக ஜனாதிபதி சதாம் ஹுசேன் அறிவித்ததும் தெரிந்தவையே

## மழை பெய்ததில் போக்குவரத்து பாதிப்பு

பச்சிலைப்பள்ளி. செப் 17
ஆனையிறவு கொம்படி வெளிப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மழை பெய்ததால் அப் பாதையில் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இப் பாதையில் பல வாகனங்கள் புதைந்த நிலையில் நிற்கின்றன.

இந்தப் பகுதிகளில் ஹெலி, பொம்மர்கள் தாக்குதல்களையும் நடத்துகின்றன. (ஓ-117)

## குழந்தைகளின்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஓரளவு போஷாக்கை வழங்கக்கூடியது. ஆனால் தற்போதைய நிலையில் தாயின் போஷாக்குப் பாதிக்கப்படுவதால் பிள்ளையின் வளர்ச்சியும் பாதிக்கப்படுகிறது.

ஒருவயதுக்கும் மூன்று வயதுக்கும் உட்பட்ட குழந்தைகளே பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர். இந்த வயதில் 20ஆயிரத்துக்கும் கூடிய எண்ணிக்கையுடைய பிள்ளைகள் உள்ளனர். அவர்களுக்குப் போதிய பால்மாவோ, உணவுக்குப் பதிலாகப் பாவிக்கும் உப உணவுப் பொருள்களோ கிடைப்பதில்லை.

இந்தநிலை தொடர்ந்தால் வளர்ச்சி பாதிப்புற்ற பிள்ளைகளின் சமுதாயம் ஒன்று உருவாகும் என்று அந்த வைத்திய வட்டாரங்கள் கவலை தெரிவித்தன, (உ-3-6)

## யாழ். கோட்டையில் நேற்றும் மோதல்!

யாழ்ப்பாணம், செப். 17
யாழ். கோட்டைப் பகுதியில் நேற்றிரவும் பெரும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும், குண்டுச் சத்தங்களும் கேட்டுக் கொண்டிருந்தன.

நகரை நோக்கி ஷெல், பீரங்கித் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை—
நேற்று அதிகாலை சுமார் ஒரு மணித்தியாலம் வரையில் கோட்டைப் பகுதியில் பெரும் குண்டுச் சத்தங்கள் கேட்டன.

நகர மக்கள் என்னவோ, ஏதோ என்று பதற்றமுற்றனர். (ஒ)

## பல்கலைக்கழக கருவிகள் பழுதடையும் நிலையில்!

யாழ்ப்பாணம், செப் 17
யாழ் பல்கலைக்கழகத்தில் உள்ள பெறுமதிமிக்க உபகரணங்கள் பழுதடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அங்கு போதனைகள் தொடர்பாக பராமரிக்கப்பட்டு வந்த கருவிகளில் அனேகமானவை ''எலக்ரோனிக்'' உபகரணங்களைக் கொண்டவை. தொடர்ந்து குளிரூட்டப்பட்ட அறைகளில் வைக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வந்த இந்தக் கருவிகளை தற்போதைய மின்வெட்டுக் காரணமாக சரியான முறையில் பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்டது.

தற்போது அவை செயல் இழக்கும் நிலைக்கு பழுதடைந்திருப்பதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கருவிகள் பழுதடைந்ததால் யாழ். பல்கலைக்கழகத்திற்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் பல்கலைக் கழகத்திற்குரிய பல இரசாயனப் பொருள்களும் சேதமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3-6)

## ஆனையிறவில் தாக்குதல்; சுற்றுலா விடுதி சேதமானது

யாழ்ப்பாணம், செப். 17
இராணுவத்தினர் தங்கியிருந்த ஆனையிறவு சுற்றுலா விடுதி மீது விடுதலைப்புலிகள் கடந்த சனிக்கிழமை ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதலில் சுற்றுலாவிடுதிக்கட்டடம் பெரும் சேதமுற்றது

அங்கிருந்த இராணுவத்தினருக்கு ஏற்பட்ட உயிர், உடல் சேதங்கள் குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை (ஒ)

## மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு

குடாநாட்டில் முக்கிய மருந்து வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

இருதய நோய், சலரோகம், ஆஸ்மா போன்ற நோய்களுக்கும் மற்றும் கர்ப்பிணிகளுக்குத் தேவைப்படும் மருந்து வகைகளுக்குமே பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த மருந்து வகைகளை இருப்பில் வைத்திருக்கும் சிலர் அவற்றை கொள்ளை விலையில் விற்பதாகப் புகார் கூறப்படுகிறது. (ஒ-3)

### யாழ். பல்கலைக்கழக

## வெளிமாவட்ட மாணவருக்கு போக்குவரத்துக்கு கடனுதவி

யாழ்ப்பாணம், செப் 17
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வெளிமாவட்ட மாணவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கு வசதியாக அவர்களுக்குப் பணஉதவி வழங்கப்பட்டு வருவதாக யாழ் பல்கலைக்கழக உபவேந்தர்பேராசிரியர் அ. துரைராஜா தெரிவித்தார்.

பல்கலைக்கழக உபவேந்தர் நல நிதியத்திலிருந்து வழங்கப்படும் இந்தப் பண உதவி, கடன்திட்ட அடிப்படையிலேயே வழங்கப்படுவதாக அவர் சொன்னார்.

சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா கடனாக வழங்கப்பட்டுவருவதாகவும் துணைவேந்தர் மேலும் கூறினார். [ஒ-6]

### முதலில்

## பெர்மிட்டுக்கான விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 17
உதவி அரசாங்க அதிபர்களால் வழங்கப்படும் பெர்மிட்டுக்கான விநியோகம் முடிவடைந்த பின்பே பங்கீட்டு அட்டைக்கு பணம் மூலம் உணவுப் பொருள்கள் விநியோகம் மேற்கொள்ள வேண்டும்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. செ. லிங்கநாதன் சகல ப. நோ. கூ. சங்க முகாமையாளர்களையும் மேற்கண்டவாறு பணித்துள்ளார்,

1500 ரூபாவுக்கு மேல் வருமானமுடையவர்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் உணவுப் பொருள்கள் காசுக்கு விநியோகிக்கப்பட இருப்பது தெரிந்ததே. (இ-3)

## பிறப்பு-இறப்பு பத்திரம்

யாழ்ப்பாணம், செப் 17
யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களின் பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை யாழ்ப்பாணம் புங்கங்குளம் சந்தியில் அமைந்திருக்கும் பிறப்பு இறப்புப் பதிவுக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-15)

## சேதம்

யாழ்ப்பாணம், செப். 17
கடந்த வியாழன் ஹெலியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட றொக்கட் தாக்குதலால் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் நுண்ணுயிரியல்'' பிரிவு சிறிது சேதமடைந்தது. (உ-3-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org